**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் ஜீன் மாதம் (30.06.2020) ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 05/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.927, பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.2**

தமிழக அரசு உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களை இனி வரும்காலங்களில் தூய்மை பணியாளர்கள் (Cleanliness Workers) என்று அழைக்கப்படுவார்கள் என வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை நாள்.21.05.2020 அரசாணை (நிலை) எண்- 53, மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **( ந.க.எண்:982 /2020/சி1)**

**அலுவலகக்குறிப்பு:**

பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.928, பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சியில் அனைத்துப் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் பதிவேடுகள், படிவங்கள் மற்றும் கணினிக்கு தேவைப்படும் மென்பொருட்கள் 2020–2021 ஆம் ஆண்டிற்கு வாங்குவதற்கும், உத்தேச செலவினம் ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.246/2017/D1)**

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.929,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.4**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரக வாகனம் (LCV)TATA ACE வாகன எண்.TN 60 AY 4473 க்கு 2020–2021 ஆண்டிற்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் செலுத்த உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.21,000/–க்குமன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.815/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.930,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் இலகுரகவாகனம் (LCV) TATA ACE வாகன எண்.TN 60 AY 4486 க்கு 2020 – 2021 ஆண்டிற்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் செலுத்த உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.21,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.815/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.931, அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கனரகவாகனஈச்சர் டிப்பர் லாரிஆகிய வாகன எண்களுக்கு சாலை வரி1.04.2020 முதல் 31.03.2021 வரை உள்ள காலத்திற்கு TN 60 Y 8120 தொகை ரூ. 2,850/–,TN 60 T 6093 தொகை ரூ.2850/–,TN 60 T 6098 தொகை ரூ. 2850/–,TN 60 AY3850 தொகை ரூ.3612/– ஆக மொத்தம் தொகை ரூ.12,162/–ஐ ஆன் லைனில் சாலை வரி செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.608/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.932,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-20ல் உள்ள எல்.எப்.சாலையின் மேல்புறம் அமைந்துள்ள பெண்கள் கழிவறைக்கு எல்.எப்.சாலையிலிருந்து சென்று வர சுள்ளக்கரை ஓடையின் குறுக்கே சிறுபாலம் அமைப்பதற்கு ரூ.4,50,000/-க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.1062/2020/இ1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.933,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.8**

இந்நகராட்சிக்கு சொந்தமான காந்திஜி பூங்கா கழிப்பறை கட்டணம் 04.07.2020 முதல் , நகராட்சி மூலம் துறை ரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்வதால், ரசீது (TOKEN) தயார் செய்வதற்கு உத்தேச செலவீனம் ரூ.50000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. **(நக.எண்3015/2017/அ1)**

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.934,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.9**

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-7,பாரஸ்ட் பங்களா தெரு மற்றும் வார்டு எண்-12,காமாட்சியம்மன் கோவில் 2வது(கே.வி.ஆர்) ஆகிய தெருக்களில் ஏற்கனவே உள்ள சிறு மின் விசை பம்பிற்கு புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து புதிய நீர் மூழ்கி மின் மோட்டார் அமைப்பதற்கு ரூ.2.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு.**(ந.க.எண்.1148 /2020/ இ1)**

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.935,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சியில் 21 வார்டுகளிலும் உள்ள சிறுமின்விசை பம்புகள், குடிநீர் பயன்பாட்டில் உள்ள மின் மோட்டர்கள் மற்றும் நகராட்சி இலவச கழிவறைகளில் உள்ள மின் மோட்டர்கள், ஆகியவைகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்வதற்கு 01.07.2020 முதல் 31.12.2020 முடிய உள்ள காலத்திற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.9.80** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.1149/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு : –**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.936,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.11**

கூடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் TN60 T6093 ஈச்சர் டிப்பிங் ஜாக்கி பழுது தடைந்துள்ளதால் அதனை சரி செய்த வகையில் செலவினத்தொகை ரூ.17,400/–ஐ இந்நகராட்சி உழுவை ஓட்டுநர்

திரு.ப.விஜயகுமார் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண்.1109/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. .மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.937,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.12**

இந்நகராட்சி பகுதிகளில் உலகலாவிய தொற்று நோயான கொரோனா வைரஸ் அதிக அளவில் பரவிவருவதை தடுக்கும் பொருட்டு குமுளி CheckPost, லோயர் CheckPost, கொரோனா பரிசோதனை மையம் மற்றும் NSKP தனியார் பள்ளியில் 150 நபர்கள் வரை தங்க வைத்து பரிசோதனை செய்யவும், சுமார் 20 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகிறது. அரசின் நிதி நிலையை கருதி குறைந்தபட்சம் 12 துப்புரவு பணியாளர்களை ஜுலை 2020 முதல் டிசம்பர் 2020 வரை ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் அவர்கள்மூலம் பணியமர்த்தி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் தொகை ரூ.7,95,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.. **(ந.க.எண்.577/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.938,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.13**

தேனி மாவட்டம் இரண்டாம் நிலை நகராட்சியான கூடலூரில் 32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 41924 மக்கள்தொகையுடன் 11685 குடியிருப்புகள் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

மேற்கண்ட பணியில் 39 DBC பணியாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஒன்றுக்கு 6 நபர்கள் வீதம் அதாவது ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றுக்கு 50 வீடுகளில் பணிகளை மேற்கொள்ள 1 குழுவில்உள்ள 6 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 300 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், தரைத் தளதொட்டிகளை பார்வையிட்டு கொசு உற்பத்திக்கு எதுவாகதிறந்திருக்கும் தொட்டிகளில் தேவைப்பட்டால் அபேட் மருந்து ஊற்றி கொசுப்புழுக்களைஅழித்தும் கொசுப்புழு வளர்ந்து காணப்பட்டால் தண்ணீரை அப்புறப்படுத்தியும் வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள தேவையற்ற பொருட்களான டீ, கப், தேங்காய் ஓடு, பழையபிளாஸ்டிக் பைகள், டயர்களைஅப்புறப்படுத்தியும் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவும் காரணங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவின்படி 39 DBCபணியாளர்களுக்குநாளொன்றுக்கு ரூ208 மற்றும் தொழிலாளர் சேமநலநிதிரூ 25 சேர்த்து ரூ.260 வீதம் ஜனவரி 2019 முதல் ஜுலை 2019 வரை ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட நகர்மன்றத் தீர்மான எண் 564 நாள் 08.03.2019 –இல் அனுமதி பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தின் வழிகாட்டுதலின் படியும், சேமநல நிதி ரூ.25 சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ.260 வீதம் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 வரை உரிய EPF செலுத்தி 39 DBC (Dengue breeding checkers) பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது மேற்காணும் டெங்கு களப்பணியாளர்களை ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரையிலான 3 மாதங்களுக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் (2019–20) செயல்முறை உத்திரவின்படி அனுமதிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 39 நபர்களை பணியமர்த்தி நகர்மன்றத் தீர்மான எண்:889 நாள் 31.003.20 மற்றும் நகர்மன்றத் தீர்மான எண்:797 நாள் 31.12.19 இன் படி நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஜுலை 2020 முதல் செப்டம்பர் 2020 வரையிலான காலத்திற்கு 39 டெங்கு களப்பணியாளர்களை பணியமர்த்தி ஏற்படும் செலவினம் கீழ்க்கண்டவாறுஉள்ளது.

**கீழ்க்கண்டவாறு (2020–2021)**

1) நபருக்குநாள்ஒன்றுக்கு ரூ 217வீதம் (ஜுலை 2020 முதல் செப்டம்பர் 2020)
   (91* 217 * 39 ) = ரூ. 770133

2) தொழிலாளர் சேமநலநிதி (13.15 %) = ரூ. 101272
3) தொழிலாளர் ESI (4.75%) = ரூ. 36581
4) தொழிலாளர் LIC (50* 39* 3) = ரூ. 5850

5) நிர்வாகசெலவு 5% = ரூ . 38507

**மொத்தம்** ரூ .9,52,343

கொசு ஒழிப்பு பணிக்காக 39 DBC பணியாளர்கள் பணியமர்த்த 3மாதங்களுக்கு (ஜுலை 2020 முதல் செப்படம்பர் 2020) உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ 10,00,000/– க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி பெற்று தனியார் மூலம் ஆட்கள் பெற்று டெங்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினைநகராட்சியின் வருவாய்நிதியிலிருந்துமேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் கொரோனாதடுப்புபணிகளின் அவசரஅவசியம் கருதியும் ஏற்கனவே DBC பணிக்கு ஆட்கள் வழங்கி வரும் **(CLEANCARE SERVICE CENTRE)**என்னும் நிறுவனத்தருற்கு ஏற்கனவே ஒப்பந்தபுள்ளியில் கொடுத்துள்ள ரூ.281/– விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.939,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சிப் பகுதிகளில் 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் மானிய திட்டம் 2019–2020ன் கீழ் வார்டு எண்.8,11,18 மெயின் பஜார் தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைத்திட ரூ.35.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது பணிகள் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்த பொது மேற்படி 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் மானிய திட்டம் 2019-2020ன் கீழ் உள்ள மேற்கண்ட மதிப்பீட்டில் உள்ள Savings தொகைக்கு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. அதன்படி வார்டு எண்-5ல் உள்ள நகராட்சி பொது மயானத்திற்கு செல்லக்கூடிய சேதமடைந்த தார்சாலையினை புதுப்பித்தல் பணிகள் உரிய மதிப்பீட்டிற்குள் செய்திட நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. கூடுதல் பணியாக செய்யும் பொழுது திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மிகமால் பணிகளை செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. மேற்காணும் பணிகளை நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி செய்து முடிக்க மன்றத்தின் அனுமதிக்கு. **( ந.க.எண்.3943 /2019/ இ1)**

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.940,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.15**

கூடலூர் நகராட்சிப் பகுதிகளில் 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் மானிய திட்டம் 2019–2020ன் கீழ் வார்டு எண்.05,16 முனியாண்டி கோயில் தெரு மற்றும் வாட்டர் டேங்க் தெருக்களில் பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை அமைத்திட ரூ.31.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது பணிகள் மண்டல செயற்பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்த பொது மேற்படி 14 ஆம் மத்திய நிதிக்குழுவின் மானிய திட்டம் 2019-2020ன் கீழ் உள்ள மேற்கண்ட மதிப்பீட்டில் உள்ள Savings தொகைக்கு பணிகள் செய்ய வேண்டியுள்ளது. அதன்படி வார்டு எண்-8ல் உள்ள காந்தி கிராமம் தெற்கு தெரு மற்றும் கிராமச்சாவடி தெரு(நகராட்சி நம்ம டாய்லட் முதல் கே.ஜி.பட்டி சாலையிலுள்ள மது வீருசிக்கம்மாள் மண்டபம் வரை) ஆகிய சேதமடைந்த தார்சாலையினை புதுப்பித்தல் பணிகள் உரிய மதிப்பீட்டிற்குள் செய்திட நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற்பொறியாளர், மதுரை அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. கூடுதல் பணியாக செய்யும் பொழுது திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மிகமால் பணிகளை செய்து முடிக்க அறிவுறுத்தப்பட்டது. மேற்காணும் பணிகளை நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி செய்து முடிக்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.3943 /2019/ இ1)**

**அலுவலகக் குறிப்பு : –**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண்.941,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.16

கூடலூர் நகராட்சியில் நகராட்சி பொதுமயானத்தில் உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்புதல் நிதி 2014–2015ன் கீழ் கட்டி முடிக்கப்பட்டு உள்ள நவீன எரிவாயு தகன மேடை பொது மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது.அதனை (NGO) தொண்டு நிறுவனத்தின் பராமரிப்பில் இயக்கி பராமரிப்பு செய்வதற்கு கீழ்கண்டவாறு இரண்டு தொண்டு நிறுவனத்தாரால் கடிதங்கள் கொடுக்கப்பட்ட விபரம் பின்வருமாறு .

| வ.எண் | தொண்டு நிறுவண விபரம் | எரியூட்டு கட்டணம் ஒரு எரியூட்டுகிறது | | பிற விபரங்கள் |
|---|---|---|---|---|
| | | பொது மக்களிடம் வசூல் செய்யும் தொகை | நகராட்சியில் செலுத்தும் தொகை ரூபாய் | |
| 1. | BEESHMAR EDUCTIONAL & SOCIAL WELFARE TRUST<br>Near by Axis Bank ATM , L.F.Road,<br>GUDALUR | 4000 | 1000 | ஒரு ஆண்டு காலத்திற்கு இயந்திர பராமரிப்பு செய்தல் |
| 2. | TEED FOUNDATION<br>5/422(3)GANGAI STREET LAST, ANGEL NAGAR,ATHIKULAM, MADURAI | 3700 | 500 | – |

**நிபந்தனைகள்**

1. கூடலூர் நகராட்சி மயான எரிவாயு கூடத்தினை பராமரிப்பு செய்வதற்கு முன் வைப்பு தொகையாக ரூ.50,000/- நகராட்சி கருவூலத்தில் செலுத்தி ரசீதினை அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.
2. கூடலூர் நகராட்சி மயான எரிவாயு கூடம் மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.
3. கூடலூர் நகராட்சி மயான எரிவாயு கூடத்தில் சடலம் ஒன்றுக்கு ரூ.4000/– மற்றும் உள்ளூர் மூலம் சடலத்தை கொண்டு வரும் ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு ரூ.500/–ம் கட்டணமாக நிர்ணயம் செய்ய அனுமதிக்கலாம். மேலும் சடலம் எரியூட்ட பெறப்படும் தொகையான ரூ.4000/–ல் 25% சதவீதம் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும். நகராட்சியால் அமைக்கப்படும் நிர்வாகக் குழுவின் மூலமே மேற்படி கட்டணத்தை அதிகமாக்கவோ அல்லது குறைக்கவோ இயலும்.
4. மேற்படி நகர்மன்றத்தால் தீர்மானம் செய்த கட்டணத்தொகை மட்டுமே பெற வேண்டும், தவிர கூடுதல் கட்டணம் வசூலிக்க கூடாது. கட்டண விபரம் குறித்து பொதுமக்கள் பார்வைக்கு அறிவிப்பு பலகை வைத்திருக்க வேண்டும்.
5. இங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு தங்கள் தொண்டு நிறுவனம் மூலமே ஊதியம் வழங்க வேண்டும்.
6. இறப்பு பதிவினை 7 நாட்களுக்கு ஒருமுறை நகராட்சி அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும்.
7. எரிவாயு மயான கூடம் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை இயங்க வேண்டும்.
8. மேற்படி கட்டிடத்தின் கட்டமைப்பில் எவ்வித மாறுதலும் தாங்களாக மேற்க்கொள்ளக் கூடாது. ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படுத்தக்கூடாது.
9. பொது மக்களுக்கு பயன்பெறும் வகையில் புகார் பதிவு செய்ய வசதி செய்யப்பட வேண்டும்.
10. அஸ்தியினை 24 மணி நேரம் கழித்து (அடுத்த நாள் காலை 9 மணிக்குள்) வழங்க வேண்டும்.
11. ஒப்படைக்கும் நாள் முதல் 1 வருடத்திற்கு இந்த பராமரிப்பு பணி தங்கள் நிறுவனத்திற்கு வழங்கப்படுகிறது.
12. கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் ஒப்படைத்த நல்ல நிலையிலேயே திரும்ப வழங்கப்பட வேண்டும்.
13. மேலே உள்ள நிபந்தனைகள் மீறப்பட்டால் எந்த நேரத்திலும் உத்தரவு ரத்து செய்யப்படும்.
14. கட்டிடம் ஒப்படைத்தபின் ஒப்பந்தபத்திரம் தயார் செய்து மூன்று நாட்களுக்குள் நகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும்.
15. எரிவாயு மயான கூடத்திற்கான மின்சார கட்டணம் முழுவதும் தாங்களே உடனுக்குடன் உரிய காலத்திற்குள் செலுத்த வேண்டும்.
16. நகராட்சி தேவைக்கு எப்போது திரும்ப ஒப்படைக்க கோரினாலும் எந்த விதமான ஆட்சேபனை இன்றியும், எந்த விதமான நஷ்ட ஈட்டுத்தொகை கோராமலும் நவீன எரிவாயு தகனமேடை இயங்கும் நிலையில் நகராட்சி வசம் ஒப்படைக்க அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும்.
17. மேற்படி இடம் மயானக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
18. சட்ட விரோதமான காரியங்கள் எதுவும் நடைபெற கண்டிப்பாக அனுமதிக்கப்படக் கூடாது.
19. இறுதி சடங்கு நிகழ்ச்சிகள் தவிர அரசியல் சம்மந்தப்பட்ட நிகழ்ச்சிகள் உள்ளிட்ட வேறு எந்தவிதமான நிகழ்ச்சிகளுக்கும் அவ்விடத்தை அறக்கட்டளை கண்டிப்பாக பயன்படுத்தக்கூடாது.
20. ஒலி, ஒளி பெருக்கிகளை அறக்கட்டளை பயன்படுத்தக்கூடாது.
21. இந்த இடத்தை பயன்படுத்துவது சம்மந்தமாக நகராட்சி/அரசு நிர்வாகம் அவ்வப்போது வகுக்கும் விதி முறைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அறக்கட்டளை கட்டுப்பட வேண்டும்.
22. குறைந்த பட்சம் பராமரிப்பு காலம் ஒரு ஆண்டு என்பதை நகராட்சி திருத்த விருப்பப்பட்டால் மேலும் நீடித்துக்கொள்ளவோ அல்லது குறைத்து கொள்ளவோ அறக்கட்டளை சம்மதம் தொவிக்க வேண்டும்.
23. அறக்கட்டளை பராமரிப்பை நிறுத்திக் கொள்ள விரும்பினால் நகராட்சிக்கு ஒரு மாத காலத்திற்கு முன்பே அறிவிப்பு முறையாக வழங்க வேண்டும்.

24. எரியூட்டும் சடலத்திற்கு வசூலிக்கப்படும் தொகையினை நிர்வாகக்குழு அவ்வப்பொழுது நிர்ணயிப்பதுடன் அத்தொகையில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய பங்குத்தொகையினை நிர்வாகக்குழு அவ்வப்பொழுது நகராட்சி கருவூலத்தில் உடன் செலுத்தப்பட வேண்டும்.
25. நிபந்தனைகள் மீறப்பட்டதிற்காக ஒரு ஆண்டு காலத்திற்குள் பராமரிப்பு ரத்து செய்யப்பட்டால், நவீன எரிவாயு தகனமேடையிலுள்ள அனைத்து கருவிகள் மற்றும் உபகரணங்கள் நகராட்சியே ஏற்றுக்கொள்ளும்.
26. பராமரிப்புக் காலத்தில் கணக்குகளை ஒவ்வொரு நிதியாண்டு முடிந்தவுடன் அடுத்து ஒரு மாத காலத்திற்குள் தணிக்கை பட்டய கணக்காளர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) மூலமாக தணிக்கை செய்ய வேண்டும். நகராட்சி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை தணிக்கையாளரின் மூலம் முறையாக காலமுறைப்படி தணிக்கைச்சான்று பெற வேண்டும்.
27. நவீனஎரிவாயு தகனமேடை, நிர்வாகக்குழு நிர்ணயிக்கும் தொகையை எரியூட்டப்படும் சடலத்துக்கு கட்டணமாக வசூலிக்கப்பட வேண்டும். மின்சாரம் மற்றும் குடிநீர் வழங்க ஆகும் செலவினத்தை அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள வேண்டும். பராமரிப்புக்கு ஆகும் செலவினத்தை பொறுத்து நகராட்சியும், அறக்கட்டளையும் சேர்ந்து நகராட்சி நிதி நிலை பாதிக்காத வகையில் வசூலிக்கும் கட்டணத்தை மறு நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டும்.
28. ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் பயன்பெறும் வகையில் பொது நவீனஎரிவாயு தகனமேடையினை பயன்படுத்திட வேண்டும்.
29. எரிவாயு மூலம் எரியூட்டப்படும் சடலத்துக்கு வசூலிக்கப்படும் தொகையில் 25 சதவீதத்தை நகராட்சிக்கு உரிய கட்டணமாக கருவூலத்தில் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி அனுமதி ரத்து செய்யப்படும்.
30. நவீனஎரிவாயு தகனமேடையினை சுற்றி தோட்டம் அமைத்தல், செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுதல், காவல் அரண் அமைத்தல் ஆகிய செலவினங்களை எரிவாயு மயான அறக்கட்டளை ஏற்க வேண்டும்.
31. எரியூட்டும் சடலம் தொடர்பாக பின்னாளில் எழும் சட்டப்பிரச்சனைகளுக்கு அறக்கட்டளையே பொறுப்பேற்க வேண்டும்.
32. தமிழ்நாடு அரசு ஆணை (3டி) எண்.7, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.3) துறை, நாள் 11.05.2005–ன்படி நவீன எரிவாயு தகனமேடை அமைப்பது தொடர்பான அனைத்து நிபந்தனைகளுக்கும் நகராட்சிக்கு அறக்கட்டளை சம்மதம் தெரிவிக்க வேண்டும்.
33. நவீன எரிவாயு தகனமேடை பராமரிப்பதற்காக கீழ்க்கண்ட ஒரு நிர்வாக குழு (Administrative Committee) அமைக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1) | நகராட்சி நவீன எரிவாயு தகனமேடை அறக்கட்டளை (Managing Trustee) | – | தலைவர் |
| 2) | நகராட்சி ஆணையாளர் | – | செயலாளர் |
| 3) | நகராட்சி துப்புரவு ஆய்வாளர் | – | செயல் உறுப்பினர் |
| 4) | நகராட்சி பொறியாளர் | – | உறுப்பினர் |
| 5) | நகராட்சி நகரமைப்பு ஆய்வர் | – | உறுப்பினர் |
| 6) | நவீனஎரிவாயு தகனமேடை அறக்கட்டணை மேனேஜர் டிரஸ்டி ஒப்புதல்படி நியமிக்கப்படும் ஒரு அறக்கட்டளை உறுப்பினர் | – | உறுப்பினர் |

மேலே உள்ள 1 முதல் 33 வரையில் உள்ள நிபந்தனைகளில் எந்தவொரு நிபந்தனையாவது மீறப்பட்டால், மேற்படி உத்தரவு இரத்து செய்யப்படும்.

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சிக்கு ரூ–50000/–முன் வைப்பு தொகையாக செலுத்தி நவீன எரிவாயு தகன மேடையினை ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு செய்து தருவதாக கடிதம் கொடுத்துள்ள பீஷ்மீர் அறக்கட்டளை அவர்களுக்கு பராமரிப்பு பணியினை வழங்கலாம்

**தீர்மான எண்.942,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.17

கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-10 பெத்து குளத்தில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் இடத்தில் உள்ள குப்பைகளை அப்புறப்படுத்தி மேற்படி தேசிய பசுமைத்தீர்பாயத்தின் வழிகாட்டுதலின்படி நிலத்தினை மீட்டெடுத்து கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே உள்ள குப்பைகளை அகற்றுவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் **ரூ.5,50,000/-க்கு** மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண்.887/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.943,அனுமதிக்கப்பட்டது**